ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2017.08.25 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - யூன் 2017

### பொதுநோக்கு

2017 யூனில் குறிப்பிடத்தக்களவு மேம்பட்ட வர்த்தக மீதி மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கான தொடர்ச்சியான உட்பாய்ச்சல் என்பவற்றின் மூலம் இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது புத்துயிர் பெற்ற அடையாளத்தினைக் காட்டியது. 2017 யூனில் கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஏற்றுமதிகளின் கணிசமானதொரு வளர்ச்சி மற்றும் நுகர்வு மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளிலானதொரு வீழ்ச்சி ஆகியன வர்த்தக மீதியில் குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினைத் தோற்றுவித்தது. நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களானது அரச பிணையங்கள் சந்தைக்கான உறுதிமிக்க உட்பாய்ச்சல்களாகக் கருதப்பட்ட வேளையில், இம்மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகளும் சாதகமாக மாறாதிருந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களின் வீழ்ச்சியின் மூலம், நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய பெறுவனவுகள் மாறாது மிதமடைந்த வேளையில் சுற்றுலா வருவாய்களும் மிதமானதொரு வளர்ச்சியை பதிவுசெய்தது. நிதியியல் கணக்கின் சாதகமான அபிவிருத்திகளும் ஏற்றுமதி வருவாய்களின் படிப்படியான வளர்ச்சியும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை நிலைப்படுத்தியதுடன் ஆண்டின் ஆரம்பித்ததுடன் ஒப்பிடுகையில் 2017 யூன் மாதமளவில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஓர் அதிகரிப்பினைத் தோற்றுவித்தது.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

2017 யூனில், ஐ.அ.டொலர் 987 மில்லியனாகக் காணப்பட்ட ஏற்றுமதி வருவாய் 9.6 சதவீதமான ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்து தொடர்ச்சியான நான்காவது மாதமாக விரிவடைந்தது. இந்த வளர்ச்சிக்கான பாரிய பங்களிப்பாக கைத்தொழிலிருந்தான ஏற்றுமதிகளைத் (77.1 சதவீதம்) தொடர்ந்து வேளாண்மை ஏற்றுமதிகள் (20.6 சதவீதம்) காணப்பட்டது.

2017 யூனில், கைத்தொழிலின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 750 மில்லியனுக்கு 9.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமைக்குப் போக்குவரத்துச் சாதனங்களின் உயர்ந்தளவான ஏற்றுமதிகளே வழிவகுத்தன. போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் 2016இன் இதையொத்த மாதத்துடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 54 மில்லியனுக்கு ஏறத்தாழ ஏழு மடங்குகளால் அதிகரித்தமைக்கு சிங்கப்பூருக்கான இரண்டு கப்பல்களின் ஏற்றுமதியே காரணமாகும். மேலும், உணவு மற்றும் குடிவகைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் போன்றவற்றிலிருந்தான உயர்ந்த ஏற்றுமதி வருவாய்களினது, கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. 2017 யூனில், உணவு மற்றும் குடிவகைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இரு மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்தது. அனைத்துத் துணை வகைளின் வளர்ச்சியின் காரணமாக, இறப்பர் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் (ஆண்டிற்கு ஆண்டு) 15.4 சதவீதத்தால் அதிகரித்தது. 2017 யூனில் எண்ணெய் குதங்கள் மற்றும் வான் எரிபொருள்களின் உயர்ந்தளவான ஏற்றுமதி அளவுகள் மற்றும் விலைகளைப் பிரதிபலித்து, பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (ஆண்டிற்கு ஆண்டு) 26.7 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ 40 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களானது ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகளிலான வீழ்ச்சியினைப் பிரதிபலித்து ஐ.அ.டொலர் 398 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 7.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தோல், பிரயாணப் பொருட்கள் மற்றும் காலணிகள் மற்றும் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றிலிருந்தான வருவாய்களும் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

தெங்கு மற்றும் வாசனைத்திரவியங்கள் தவிர்ந்த வேளாண்மை உற்பத்திகளின் பிரதான வகைகளின் உயர்ந்தளவான ஏற்றுமதியைப் பிரதிபலித்து 2017 யூனில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 232 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 8.3 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 139 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 13.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, 9.5 சதவீத வெளியீட்டு மட்டத்தின் வீழ்ச்சிக்கு மத்தியிலும் உயர்ந்தளவான விலைகளே காரணமாகும். பன்னாட்டுச் சந்தையின் மிகவும் உயர்ந்தளவான தேயிலை விலைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில், சிலோன் தேயிலைக்கான சராசரி ஏற்றுமதி விலையானது 2016இல் காணப்பட்ட கி.கிறாம் ஒன்றுக்கான ஐ.அ.டொலர் 4.27 இலிருந்து 2017 யூனில் கி.கிறாம் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 5.36 இற்கு அதிகரித்தது. இம்மாத காலப்பகுதியில், சிறுவேளாண்மை உற்பத்திகளிலிருந்தான வருவாய்களும் 30.8 சதவீதத்தால் அதிகரித்தது. ஐரோப்பிய சந்தைகளுக்கான கடற்றொழில் உற்பத்தி ஏற்றுமதிக்கான தடை நீக்கங்களிலிருந்தான நன்மைகளின் காரணமாக 2017 யூனில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக, 2017 யூனில் கடலுணவு ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 15 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 17.4 சதவீதத்தால் அதிகரித்து, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளில் 101.2 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இருப்பினும், கராம்பு மற்றும் கறுவா போன்றவற்றின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காணப்பட்டமைக்கு மத்தியிலும் மிளகு மற்றும் சாதிக்காய் மற்றும் பழரசம் போன்றவற்றின் ஏற்றுமதி அளவு விலைகளின் வீழ்ச்சியின் பிரதான காரணத்தால், வாசனைத்திரவியங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 12.9 சதவீதமானதொரு வீழ்ச்சியினைப் பதிவுசெய்தது.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தேயிலை ஏற்றுமதி, போக்குவரத்துச் சாதனங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் பொறி மற்றும் இயந்திரவியல் உபகரணங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட உயர்ந்தளவிலான வருமானத்தின் விளைவாக, 2017இன் முன்னரையாண்டு காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் ஐ.அ.டொலர் 5,398 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 5.2 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், கவனத்தில் கொள்ளப்பட்ட காலப்பகுதியில், புடவைகள் மற்றும் ஆடைகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் மற்றும் தோல், பிரயாணப் பொருட்கள் மற்றும் காலணிகள் போன்றவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

**அட்டவணை 1: ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)**

| வகை | யூன் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | யூன் 2017 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) | சன - யூன் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - யூன் 2017 ஐ.அ.டொ.மி ல் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **682.9** | **749.8** | **9.8** | **4,004.5** | **4,065.8** | **1.5** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 430.2 | 398.1 | (7.5) | 2,514.7 | 2,383.6 | (5.2) |
| இதில் ஆடைகள் | 407.3 | 375.4 | (7.8) | 2,377.0 | 2,244.7 | (5.6) |
| இறப்பர் உற்பத்திகள் | 63.3 | 73.1 | 15.4 | 372.0 | 388.5 | 4.4 |
| உணவுப் பொருட்கள் குடிபானம் மற்றும் புகையிலை | 28.7 | 58.9 | 105.1 | 174.0 | 190.8 | 9.7 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 24.0 | 28.5 | 18.7 | 142.5 | 180.4 | 26.6 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 23.0 | 29.2 | 26.7 | 132.2 | 176.9 | 33.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.6 | 54.3 | 615.9 | 67.1 | 125.0 | 86.2 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 21.9 | 20.6 | (5.5) | 148.4 | 123.9 | (16.5) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 19.4 | 15.4 | (20.3) | 81.6 | 77.7 | (4.8) |
| அடிப்படை உலோகம் மற்றும் பொருட்கள் | 7.6 | 6.8 | (10.0) | 36.8 | 51.4 | 39.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 2.1 | 4.0 | 91.3 | 10.2 | 17.7 | 74.4 |
| ஏனையவை | 55.2 | 60.9 | 10.3 | 325.0 | 349.8 | 7.6 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **214.1** | **232.0** | **8.3** | **1,104.7** | **1,306.4** | **18.3** |
| தேயிலை | 121.9 | 138.6 | 13.7 | 618.4 | 728.4 | 17.8 |
| தேங்காய் | 31.5 | 30.1 | (4.2) | 174.2 | 173.8 | (0.2) |
| வாசனைத்திரவியம் | 32.0 | 27.8 | (12.9) | 125.3 | 160.7 | 28.2 |
| கடலுணவு | 12.9 | 15.2 | 17.4 | 83.5 | 117.1 | 40.3 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.0 | 13.1 | 30.8 | 56.9 | 71.4 | 25.6 |
| இறப்பர் | 1.8 | 2.0 | 10.1 | 17.0 | 23.9 | 40.8 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 1.9 | 2.9 | 52.6 | 16.3 | 16.4 | 0.9 |
| மரக்கறிகள் | 2.1 | 2.3 | 4.9 | 13.2 | 14.7 | 10.8 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **3.5** | **5.5** | **56.3** | **21.2** | **25.4** | **19.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **900.6** | **987.3** | **9.6** | **5,130.3** | **5,397.6** | **5.2** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.

2017இன் முன்னரைப் பகுதியில் இலங்கைக்கான வணிகப் பொருள் ஏற்றுமதிக்கான முதன்மைச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 50 சதவீதத்திற்கு வகைகூறின.

**இறக்குமதிச் செயலாற்றம்**

2017 யூனில், இறக்குமதிகள் மீதான செலவினமானது 2016 செத்தெம்பரிலிருந்து முதல் தடவையாக ஐ.அ.டொலர் 1,541 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.0 சதவீதமானதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இது குறிப்பாக, இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் உள்ளடங்கலாக அனைத்து முதன்மை வகைகளின் குறைந்தளவிலான இறக்குமதிகளைப் பிரதிபலித்தது.

2017 யூனில், எரிபொருள் இறக்குமதிகள் மீதான குறைந்தளவிலான செலவினத்தின் காரணத்தினால் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினங்களானது ஐ.அ.டொலர் 792 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 12.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2017 யூனில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் போன்றவற்றின் குறைந்த இறக்குமதியளவு மற்றும் சராசரி இறக்குமதி விலைகள் போன்றவற்றினைப் பிரதிபலித்து எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினங்கள் (ஆண்டிற்கு ஆண்டு) 34.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மேலும், இரும்பு மற்றும் உருக்கு போன்ற அடிப்படை உலோகங்கள் அதேபோல் விசேடமாக அடிப்படை வடிவிலான இறப்பர் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றின் மீதான குறைந்தளவான இறக்குமதிச் செலவுகளும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளிலான வீழ்ச்சிக்குக் குறிப்பிடத்தக்களவிற்குப் பங்களித்தன. எனினும், தங்கம் மீதான இறக்குமதிச் செலவுகள் 42.3 சதவீதத்தால் தொடர்ந்தும் அதிகரித்த வேளையில், யூரியாவின் உயர்ந்தளவான இறக்குமதிகளின் காரணமான வளமாக்கிகள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் 2016 ஓகத்துக்குப் பின்னர் முதல் தடவையாக அதிகரித்தது. மேலும், புடவை மற்றும் புடவை பொருட்களின் இறக்குமதிச் செலவினங்கள் 2017 யூனில் (ஆண்டிற்கு ஆண்டு) 1.7 சதவீதத்தால் மிதமான வளர்ச்சியொன்றினைக் காட்டியது.

2017 யூனில், மருத்துவம் மற்றும் மருந்தாக்கல் பொருட்கள், ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் தொலைத்தொடர்புக் கருவிகள் போன்ற உணவல்லாத நுகர்வுப்பொருட்களின் குறைந்தளவான இறக்குமதிகளினால் பிரதானமாக உந்தப்பட்டு, நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினங்கள் ஐ.அ.டொலர் 323 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 8.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மேலும், மைசூர் பருப்பு, உள்ளி, வாசனைத்திரவியங்கள், குடிவகைகள் மற்றும் கடலுணவு போன்ற உணவும் குடிபானமும் மீதான இறக்குமதிச் செலவினமானது வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், 2017 சனவரியிலிருந்து அவதானிக்கப்பட்ட அரிசி இறக்குமதியின் அதிகரித்த போக்கானது 2017 யூனிலும் தொடர்ந்தது. இதன்படி, 2017 யூனில், அரிசியின் இறக்குமதி அளவானது 2016 யூனில் காணப்பட்ட 2 மில்லியன் கி.கிறாமிலிருந்த 16 மில்லியன் கி.கிறாமிற்கு அதிகரித்தன் காரணமாக அரிசி இறக்குமதிகள் மீதான செலவினங்கள் எட்டு மடங்கிற்கும் அதிகமாக அதிகரித்து. மேலும், உயர்ந்தளவான இறக்குமதி விலைகளின் காரணமாக சீனியின் மீதான இறக்குமதிச் செலவினமானது ஐ.அ.டொலர் 26 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 3.4 சதவீதத்தால் அதிகரித்தது.

2017 யூனில் இடைநிலைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது ஐ.அ.டொலர் 405 மில்லியனுக்கு (ஆண்டிற்கு ஆண்டு) 1.2 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு கட்டட மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் குறைந்தளவிலான இறக்குமதிகளே காரணமாகும். 2017 யூனில் கட்டட மூலப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமானது (ஆண்டிற்கு ஆண்டு) 6.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு, இரும்பு மற்றும் உருக்கு, சீமெந்து, மர உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் மற்றும் கனிம உற்பத்திகள் போன்றவற்றின் குறைந்தளவிலான இறக்குமதிகளே காரணமாகும். புடவைக்

கைத்தொழில், இலத்திரனியல் உந்து ஊர்திகள் மற்றும் உருவாக்கல் தொகுதிகள், வேளாண்மை, பொறி மற்றும் தொலைத்தொடர்புக் கருவிகள் போன்றவற்றிற்கான பொறி இறக்குமதிகளில் பதிவுசெய்யப்பட்ட இறக்குமதிக் வீழ்ச்சியினை பிரதிபலித்து, பொறி மற்றும் உதிரிப்பாகங்கள் மீதான இறக்குமதிகள் செலவினமானது இம்மாத காலப்பகுதியில் 2.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சுருக்கமாக, வான், உழவுஇயந்திரம் மற்றும் நீர் தாங்கிகள் போன்ற வீதி வாகனங்களின் உயர்ந்தளவான இறக்குமதிகளின் காரணத்தால் 2017 யூனில் போக்குவரத்துக் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினங்கள் (ஆண்டுக்கு ஆண்டு) 19.1 சதவீதத்தால் அதிகரித்தது.

ஒன்றுசேர்ந்த அடிப்படையில், எரிபொருள், தங்கம் மற்றும் அரிசி போன்றவற்றிலான உயர்ந்தளவான இறக்குமதிகளின் காரணமாக, 2017இன் முதலரைக் காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினங்கள் ஐ.அ.டொலர் 10,151 மில்லியனுக்கு (ஆண்டுக்கு ஆண்டு) 8.9 சதவீதத்தால் அதிகரித்தது. இருப்பினும், பொறி மற்றும் உதிரிப்பாகங்கள், தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் புடவை மற்றும் புடவை ஆபரணங்கள் போன்றவற்றின் மீதான இறக்குமதிச் செலவினங்கள், 2017 முதலரைக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

2017இன் சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதியில் இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் யப்பான் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறின.

**அட்டவணை 2 - இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | யூன் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | யூன் 2017 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன - யூன் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - யூன் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **354.1** | **322.7** | **(8.9)** | **2,107.7** | **2,223.9** | **5.5** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 137.4 | 131.4 | (4.3) | 775.7 | 923.5 | 19.1 |
| மரக்கறிகள் | 32.8 | 27.1 | (17.5) | 198.3 | 176.7 | (10.9) |
| பால் உற்பத்திகள் | 22.4 | 23.5 | 5.0 | 119.4 | 160.4 | 34.3 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 25.0 | 25.9 | 3.8 | 133.7 | 150.7 | 12.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 1.7 | 7.5 | 331.6 | 11.0 | 138.1 | 1,157.6 |
| வாசனைத் திரவியங்கள் | 10.6 | 7.3 | (31.8) | 67.0 | 50.7 | (24.3) |
| குடிபானங்கள் | 9.2 | 6.0 | (34.6) | 42.5 | 38.9 | (8.5) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 35.6 | 34.1 | (4.2) | 203.8 | 208.0 | 2.1 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 216.7 | 191.3 | (11.7) | 1,332.0 | 1,300.4 | (2.4) |
| ஊர்திகள் | 56.9 | 54.0 | (5.1) | 419.3 | 370.2 | (11.7) |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 53.0 | 45.0 | (15.2) | 264.3 | 248.7 | (5.9) |
| ஆடைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 28.3 | 24.5 | (13.5) | 172.0 | 198.9 | 15.6 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 78.5 | 67.8 | (13.6) | 476.4 | 482.6 | 1.3 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **909.7** | **792.1** | **(12.9)** | **4,780.4** | **5,349.0** | **11.9** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எரிபொருள் | 304.2 | 200.6 | (34.1) | 1,177.8 | 1,624.5 | 37.9 |
| இதில் மசகெண்ணெய் | 107.8 | 35.6 | (67.0) | 267.7 | 279.4 | 4.4 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 196.3 | 164.9 | (16.0) | 813.6 | 1,174.3 | 44.3 |
| நிலக்கரி | 0.1 | 0.0 | (99.9) | 96.5 | 170.8 | 77.0 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 44.1 | 56.9 | 28.8 | 213.0 | 328.0 | 54.0 |
| இதில் தங்கம் | 32.3 | 46.0 | 42.3 | 145.6 | 274.9 | 88.9 |
| புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 215.4 | 219.0 | 1.7 | 1,346.7 | 1,306.9 | (3.0) |
| இரசாயன உற்பத்திகள் | 70.3 | 67.1 | (4.7) | 435.9 | 408.2 | (6.4) |
| அடிப்படை உலோகங்கள் | 56.5 | 32.5 | (42.5) | 190.2 | 251.9 | 32.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 5.9 | 7.3 | 22.9 | 133.1 | 162.5 | 22.1 |
| ஊர்திகள் மற்றும் பொறி உதிரிப்பாகங்கள் | 26.3 | 21.6 | (17.7) | 144.2 | 147.8 | 2.5 |
| இறப்பர் மற்றும் அதன் பகுதிகள் | 25.3 | 20.5 | (19.1) | 148.6 | 142.2 | (4.3) |
| கனிம உற்பத்திகள் | 6.5 | 12.0 | 85.8 | 74.9 | 39.1 | (47.7) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 4.1 | 7.2 | 74.0 | 32.8 | 27.1 | (17.5) |
| ஏனையவை | 151.1 | 147.6 | (2.3) | 883.3 | 910.8 | 3.1 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **410.1** | **405.3** | **(1.2)** | **2,426.7** | **2,447.2** | **0.8** |
| பொறிகள் மற்றும் கருவிகள் | 224.6 | 220.2 | (2.0) | 1,371.9 | 1,319.0 | (3.9) |
| கட்டடப் பொருட்கள் | 137.9 | 128.5 | (6.8) | 760.7 | 789.6 | 3.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 46.8 | 55.8 | 19.1 | 290.9 | 333.8 | 14.7 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.7 | 0.8 | 21.4 | 3.3 | 4.7 | 45.0 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **1.9** | **20.8** | **974.2** | **6.2** | **130.9** | **2,014.9** |
| **மொத்த இறக்குமதி** | **1,675.8** | **1,540.9** | **(8.0)** | **9,321.0** | **10,151.0** | **8.9** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
லங்கா ஐஓசி பிஎல்சி
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

## வரைபடம் 1: ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம்







மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

**வர்த்தக நிலுவை**

2017 யூனில், வர்த்தக நிலுவையின் பற்றாக்குறை 2016 யூனின் ஐ.அ.டொலர் 775 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 554 மில்லியனுக்கு குறுக்கமடைந்தது. 2017இன் முதலரைக் காலப்பகுதிக்கான ஒன்றுசேர்ந்த வர்த்தகப் பற்றாக்குறை 2016இன் இதே காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,191 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 4,753 மில்லியனுக்கு அதிகரித்தது.

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**

2017 யூன் காலப்பகுதியில், சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 123,351 சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 4.5 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முன்னரைக் காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் ஒரேமாதிரியான போக்கினைத் தொடர்ந்து 2017 யூன் காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான[1] வருகைகள் ஐ.அ.டொலர் 211.6 மில்லியனுக்கு அதிகரித்தது. இதன் காரணமாக, ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முன்னரைக் காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான ஐ.அ.டொலர் 1,733.6 மில்லியனுக்கு 4.8 சதவீதத்தால் அதிகரித்தது. மத்திய கிழக்கிலிருந்தான பயணிகள் வருகையின் வீழ்ச்சி, சீனா பயணிகள் வருகையின் குறைவான வளர்ச்சி அதேபோல் பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தின் திருத்தம் காரணமாக சில பரப்புகளின் மீள் அட்டவணை போன்றவை 2017இன் முதலரைக் காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களின் மிதமான வளர்ச்சிக்கு பகுதியளவில் காரணமாயிருந்தன.

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**

இம்மாத காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 557.6 மில்லியனுக்கு வகைகூறி ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், பணவனுப்பல்களின் 13.5 சதவீத வீழ்ச்சியின் மூலம் தொழிலாளர் பணவனுப்பல்களின் கீழ்நோக்கி ஓர்

---

[1] இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை அதன் சராசரித் தங்கியிருக்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரிச் செலவு தொடர்பான 2017ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் பற்றிய அளவீட்டினை வெளியிட்டதும் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்படும்.

குறிப்பிடத்தக்க வீழ்ச்சி 2017 யூனில் அவதானிக்கப்பட்டது. தொழிலாளர் பணவனுப்பல்களின் தொடர்ச்சியான வீழ்ச்சியானது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவுகின்ற மோசமான பொருளாதார மற்றும் புவிசார் நிலைமைகளுக்கு பங்களித்தன. இதன் காரணமாக, ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2017இன் முதலரைக் காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்புதல்களிலிருந்தான உட்பாய்ச்சல்கள் 2016இன் இதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,354.7 மில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

**நிதியியல் பாய்ச்சல்கள்**

தொடர்ச்சியான முதலீட்டாளர் நம்பிக்கையினை பிரதிபலித்தும் நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சலை முன்னைய மாதத்தில் அவதானிக்கப்பட்ட சாதகப் போக்கினை தொடர்ந்து. 2017 யூனில் அரச பிணைங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீடுகளானது ஐ.அ.டொலர் 97.6 மில்லியனான தேறிய உட்பாய்ச்சலினை பதிவுசெய்தது. இதன்படி, ஆண்டின் முதலரைக் காலப்பகுதியில் அரச பிணைங்களின் மொத்த ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல்களானது ஐ.அ.டொலர் 153 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், ஆண்டின் முன்னரைக் காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 145.9 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 83.4 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்கள் என்பனவற்றை உள்ளடக்கி ஐ.அ.டொலர் 229.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தன. மேலும், 2017இன் முன்னரைக காலப்பகுதியில் குழு நிலைக் கடன் வருவாய்கள் உள்ளடங்கலாக அரசிற்கான நீண்டகாலக் கடன்கள் 2016இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 98.3 மில்லியனான தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 493.3 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்தது.

**திரண்ட சென்மதி நிலுவை நிலைமை**

2017இன் முன்னரைக காலப்பகுதிக்கான திரண்ட சென்மதி நிலுவை 2016இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,186.1 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,563.4 மில்லியன் கொண்ட மேலதிகத்தினைப் பதிவுசெய்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

**பன்னாட்டு ஒதுக்குகளும் செலாவணிவீத அசைவுகளும்**

2017 யூன் இறுதியில் இலங்கையின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் குழு நிலைக்கடன் வசதிகள் போன்றவற்றின் வருவாய்கள் மூலம் ஐ.அ.டொலர் 7.0 பில்லியனாக அதிகரித்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 4.1 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.1 பில்லியனாக மதிப்பிடப்பட்டு 5.3 மாத இறக்குமதிகளுக்குச் சமனானதாகக் காணப்பட்டது.

2016 இறுதியிலிருந்து 2017 ஒகத்து 24 வரையான ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 2.0 சதவீதத்தினால் மிதமான தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இக்காலப்பகுதியில் ரூபாவானது யூரோவிற்கெதிராக 12.5 சதவீதத்தினாலும் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 5.9 சதவீதத்தினாலும் யப்பானியயென்னுக்கெதிராக 8.1 சதவீதத்தினாலும் கனேடியடொலருக்கெதிராக 8.8 சதவீதத்தினாலும் அவுஸ்திரேலியடொலருக்கெதிராக 10.2 சதவீதத்தினாலும் இந்திய ரூபாவிற்கெதிராக 7.6 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

‘

## அட்டவணை 3: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | யூன் 2016 ஐ.அ.டொ. மில் | யூன் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன -யூன் 2016 (ஆ) ஐ.அ.டொ. மில் | சன - யூன் 2017 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 900.6 (ஆ) | 987.3 | 9.6 | 5,130.3 | 5,397.6 | 5.2 |
| இறக்குமதிகள் | 1,675.8 | 1,540.9 | -8.0 | 9,321.0 | 10,151.0 | 8.9 |
| வர்த்தக மீதி (தேறிய) | -775.2 | -553.6 | - | -4,190.7 | -4,753.5 | - |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 202.5 (ஆ) | 211.6 | 4.5 | 1,654.3 (ஆ) | 1,733.6 | 4.8 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 644.5 | 557.6 | -13.5 | 3,613.1 | 3,354.7 | -7.2 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (இ) | -3.6 | 38.2 | - | -40.9 | 229.3 | - |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (ஈ) | 299.5 (ஆ) | 304.0 | 1.5 | 1,137.1(ஆ) | 3,353.0 | 194.9 |
| இதில், | | | | | | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 193.6 | 157.7 | -18.5 | 601.1 | 729.8 | 21.4 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | - | - | 1,500.0 | - |
| நீண்ட காலக் கடன்கள் | - | - | - | - | 450.0 | - |
| குறுங்காலக் கடன்கள் | 100.9 (ஆ) | 141.3 | 40.1 | 520.3(ஆ) | 1,110.5 | 113.4 |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | - | - | - | 129.4 | 146.5 | 13.2 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
இலங்கையின் முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது.

(ஆ) திருத்தப்பட்டது.

(இ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள், அரசாங்கத்திற்கான மூலதனம் மற்றும் நடைமுறை மாற்றல்கள், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் என்பனவற்றின் விற்பனையிலிருந்தான உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கத்தின் கூட்டுக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் மூன்று மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் உள்ளடக்குகிறது.